வரச்சொன்னார்கள்...
வந்தார்கள்...
வென்றார்கள்...

வரலாற்றாய்வாளர்
செ. திவான் M.A., M.Phil.,



ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

வெளியீட்டெண்: 162

வரச்சொன்னார்கள் வந்தார்கள் வென்றார்கள்

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A. M.Phil

இலக்கியச்சோலை

26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு

சென்னை - 600 003.

வரச்சொன்னார்கள்
வந்தார்கள்
வென்றார்கள்

வரலாற்றாய்வாளர் செ. திவான் M.A. M.Phil

டிசம்பர் 2021 | 32 பக்கங்கள் | ₹ 20

அச்சிடுபவர்: எஸ்.கே.எஸ். பிரிண்டர்ஸ், சென்னை - 02.

இலக்கியச்சோலை

26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு, சென்னை - 600003

© ஆசிரியர்

Varachonnaarkal
Vanthaarkal
Vendraarkal

Se. Diwan

Dec 2021 | 32 Pages | Price ₹ 20

Printer: SKS Printers, Chennai - 02.

Ilakkiyacholai

26, Barracks Road, Periyamet, Chennai - 600 003
Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com
© Author

பதிப்புரை

கடந்த கால நிகழ்வுகளை மனிதனுக்கு அறிவிக்கும் மகத்தான பணியை வரலாறு நிறைவேற்றி வருகிறது. அதே சமயம் வரலாற்றில் மேற்கொள்ளப்படும் திரிபுகள் ஒரு இனத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் இரண்டாவது வேலையை இந்தியாவில் வலதுசாரி இந்து தேசியவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களை நாகரிகம் தெரியாதவர்களாகவும் கொடுங்கோலர்களாகவும் சித்தரிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'கோயில்களை இடித்தார்கள், கோயில் சொத்துகளை கொள்ளையடித்தார்கள், இந்துக்களை கொத்துக் கொத்தாக கொலை செய்தார்கள்' என்று ஆதாரம் இல்லாத செய்திகள் இன்று வரலாறுகளாக திணிக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்து திரைப்படங்களும் எடுக்கப்படுகின்றன.

மன்னர்களை, மன்னர்களின் அளவுகோல் கொண்டு உரசிப் பார்க்க வேண்டுமே தவிர, அவர்களை அவர்களின் மதங்களை கொண்டு அடையாளப்படுத்துவது அறிவுடைமையாகாது. எதிரியின் பகுதியை தனதாக்கி தனது அரசின் எல்லையை விரிவுபடுத்துவதே பெரும்பான்மை மன்னர்களின் நோக்கமாக இருந்துள்ளது. இதில் இந்து, முஸ்லிம் என்று எந்த பாகுபாடும் கிடையாது. முஸ்லிம் மன்னர்களின் படைகளில் இந்துக்களும் இந்து மன்னர்களின் படைகளில் முஸ்லிம்களும் பணியாற்றியது சர்வ சாதாரணம். இந்து கோயில்களை இடித்த இந்து மன்னர்களும் இந்த பூமியில் ஆட்சி செய்துள்ளார்கள். முஸ்லிம் மன்னர்களை எதிர்த்து போரிட்ட முஸ்லிம் மன்னர்களும் இங்கு இருந்துள்ளார்கள்.

வரலாறு இவ்வாறு இருக்க, இதில் முஸ்லிம்களை மட்டும் தனியாக பிரித்து, கொடுங்கோலர்கள் பட்டம் சுமத்தி, தங்களின் பிரிவினைவாத அரசியலுக்கு பயன்படுத்தி வருகின்றனர் இந்துத்துவவாதிகள். அத்துடன், முஸ்லிம்களுக்கு அந்நியர்கள் பட்டம் சூட்டுவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதனை

மையப்படுத்தி பிரபல எழுத்தாளர்களின் நூல்களும் வந்துள்ளன. மதன் எழுதிய 'வந்தார்கள் வென்றார்கள்' அதில் முக்கியமானது.

ஆனால், முஸ்லிம் மன்னர்களை வரவழைத்தது யார் என்ற உண்மையை மதன் தனது புத்தகத்தில் சொல்லவில்லை. மதன் சொல்ல மறந்த அல்லது மறைத்த செய்திகளை வரலாற்று ஆதாரங்களுடன் அழகாக பதிவு செய்துள்ளார் வரலாற்றாய்வாளர் செ. திவான். உண்மை வரலாற்றை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர் செ. திவான். அதனை இப்புத்தகத்திலும் காண முடியும்.

செ. திவான் அவர்களின் மற்றுமொரு புத்தகத்தை கொண்டு வருவதில் இலக்கியச்சோலை பெருமிதம் கொள்கிறது. அல்லாஹ் அன்னாரின் நேரம் மற்றும் ஆரோக்கியத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பானாக.

வாசகர்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

குறைகள் எங்களைச் சாரும். நிறைகள், குறைகள் ஏதுமற்ற வல்லோன் அல்லாஹ்வை சாரும்.

இலக்கியச்சோலை

வரச்சொன்னார்கள்... வந்தார்கள்... வென்றார்கள்!

பாபரை வரச் சொன்ன ராணா சங்கா

ஜனவரி, 1994இல் விகடன் வெளியீடாக மதன் எழுதிய 'வந்தார்கள்... வென்றார்கள்' என்ற நூல் வந்தது. தமிழகமெங்கும் பல்லாயிரக் கணக்கில் விற்பனையானது, ஆகி வருகிறது. அதில் தைமூர் தொடங்கி, ஔரங்கஜேப் வரை எழுதியிருப்பார். இந்த தலைப்பே மாற்றப்பட வேண்டியது. இதில் மறைக்கப்படும் செய்தி களையும் சொல்லி ஆக வேண்டியுள்ளது.

தந்தை வழியில் தைமூர்; தாயார் வழியில் செங்கிஸ்கான் (ஜஹிருத்தீன்) வாரிசாக ஜாகிர் உத்தீன் முஹம்மது பாபர் 14.2.1483 இல் பிறந்தார். பாபர் இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிர்மாணித்து இந்திய வரலாற்றில் நிலையான புகழைத் தேடிக் கொண்டவர். பாபர் தமது சுயசரிதையை துஸுக்கி பாபரி (Tuzu ki Baburi) என்று எழுதியுள்ளார். அது பாபரின் வாழ்க்கைக் குறிப்புகள் (Memoirs of Babar) என்று அழைக்கப்படுகிறது.

பாபரின் சுயசரிதை அவரது ஓய்வு இடைக் காலங்களில் தனது தாய் மொழியான துருக்கியில் எழுதப்பட்டது. பாரசீகத்தில் இருமுறை மொழிபெயர்க்கப்பட்டது. பையாண்டகானால் முதலில் (Payanda Khan) பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. பிறகு சக்கரவர்த்தி அக்பரின் விருப்பப்படி கி.பி. 1590இல் மிகவும் கவனமாக பைராம் கானின் மகன் மிர்சா அப்துர் ரஹீம் கானால் (Abdur Rahim Khan) பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. பல ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

எம். பாவெட்டி டிகோர்ட் டெய்லி (M.Pavet -de - Courteille) என்பவரால் 1871இல் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு வெகு காலத்திற்கு முன்பே ஜான் லெய்டன் (John Leyden) வில்லியம் எரீஸ்கின் (Willam Erskine) (Mrs. Annette Susannah Beveridge) திருமதி ஏ.எஸ். பெவரிட்ஸ் அவர்களாலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் பெவரிட்ஸ் மொழிபெயர்ப்பு

பாபரின் துருக்கி மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. மற்ற இரண்டு ஆங்கில மொழிபெயர்ப்புகளும் பாரசீக மொழிபெயர்ப் பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை ஆகும். ஆகையினால் பெவ ரிட்ஜ் செய்துள்ள மொழிபெயர்ப்பு அதிகாரப்பூர்வமானதும் நம்பத் தக்கதுமாகும்.

தொட்டிலிலிருந்து இடுகாடு வரை பாபர் தமது உயிருக்காகவும் சிம்மாசனத்துக்காகவும், போரிட வேண்டியிருந்தது. சிறந்த மெச்சத் தகுந்த குதிரைப் படை வீரர்; சிறப்பான இலக்கு குறித்திறலாளர்; சிறந்த வாள் வீரர். உடல் வலிமையும் வீரமும் படைத்தவர். துணி கரச் செயல்களைப் புரிவதற்கான ஆற்றலைப் பெற்றவர். சாவை அலட்சியம் செய்பவர், அசாதாரண பொறுமையும் இன்னல்களைச் சகிக்கும் தன்மையும் கொண்டவர். சிறந்த மக்கள் தலைவர், படை வீரர்களோடு இருந்தார். அவர்களுடன் இணைந்து நின்று இன் னல்களை அனுபவித்தவர். இதோ அதற்கு ஒரு சான்று...

ஒரு படையெடுப்பின் போது தனது வீரர்களுடன் பாபர் சென்று கொண்டிருக்கிறார். மிகக் கடுமையான உறைபனி. பனிக்கட்டிகளை தனது கரங்களினாலே அப்புறப்படுத்துகிறார். அது குகைவாயில், அந்த இடத்தில் தான் உட்காருவதற்காக சிறிய இடத்தை தனது கைகளால் தயார் செய்து கொண்டார். வீரர்களோ பாபரை உள்ளே சென்று ஒய்வெடுங்கள் என்று வற்புறுத்தினர். ஆனால் பாபர் அவ் வாறு செல்லாமல் தனது வீரர்களுடனே தங்கி இருந்தார். ''என் னுடைய வீரர்கள் பனியில் கஷ்டப்பட நான் சுகமாக இருப்பதும், வசதியுடன் தூங்குவதும், அவர்கள் துயரில் இன்னலில் மூழ்கி இருப்பதும், மனிதப் போக்காக இராது, தோழமைக்கு மாறானது. நான் பொறுக்க முடியாததை வலிமை வாய்ந்த எம்மனிதன்தான் பொறுக்க முடியும்'' என்றார்.

நண்பர்களுக்கிடையில் மரணமடைதல் திருமணத்திற்குரிய விருந்தாகும் என்பது பாரசீகப் பழமொழி. (In the company of friends, death is a nuptial feast)

ஆகையினால் பனி என் தலைமீதும், முதுகிலும், காதுகளிலும் நான்கு அங்குல கனத்திற்குப் படிந்திருந்த போதிலும் நான் தோண் டிய குழியிலேயே நான் தங்கியிருந்தேன் என்று பாபர் எழுதுகிறார்.

பலமுறை போர்க்களங்களில் தோல்வியைத் தழுவிய பாபர் தாய் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டவர். பேராபத்துக்கு உள்ளாக்கும் பயணங்கள் பல சந்தித்தவர். படிப்படியாக முதல் தர வீரரானார்.

பாபரின் வீரச் செயல்களை, வியப்புக்கு உட்படுத்தும் விசித்தி ரங்களை தாரிகி ரஷீதி (Tari ki Rashidi) நூல் ஆசிரியர் மீர்ஸா ஹைதர் தௌலத் (Mirza Haider Dawlat) விளக்குகிறார். (இ.டெனி ஸன் ராஸ், என். எலியாஸ் மொழிபெயர்ப்பு)

அவரது மகள் குல்பதன் பேகம் (Gulbadan Begam) ஹுமாயூன் நாமா (Humayun Nama) என்ற நூலில் அவ்வாறே வர்ணிக்கிறார்.

பேராசிரியர் வின்ஸ்டன்ஸ்மித் 'அவரது காலத்திய ஆசியாவின் மிகச்சிறந்த இளவரசர் என்றும், எக்காலத்துக்குரியதும், எந்நாட் டுக்குரியதுமான அரசர்களுக்கிடையில் மிக உயர்ந்த இடத்தைப் பெறத் தகுதியுள்ளவர் என்றும் புகழ்ந்துரைத்துள்ளார்.

ரஷ்புரூக் வில்லியம்ஸ் (Rushbrook Willams) An Empire Builder of the sixteenth century ... Babur) நூலில் (அலகாபாத் யுனிவர்சிடி பிரஸ் வெளியீடு 3, 1918) பாபரை மனிதர் என்ற நிலையிலும், அர சர் என்ற நிலையிலும் வானளாவப் புகழ்கிறார்.

நாகரிகத்திலும் இணக்க நயப் பண்பிலும் பாபருக்கு மிஞ்சி யவர்கள் இல்லை. முகலாயப் பேரரசிற்கு அஸ்திவாரமிட்டவர் பாபர். அவர் இந்தியா மீது படையெடுத்து வந்தாரா? வரச் சொன் னார்களா?

டெல்லி குறித்து வரலாற்றிற்கு எட்டாத தொன்மை வாய்ந்த நகரமென்று கருதுவதற்குரிய சான்றுகள் கிடைப்பதில்லை.

பல சிறு நகரங்களை உள்ளடக்கிய டெல்லி என்ற பெயருடைய பகுதி கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நிறுவப் பெற்றது. 11வது நூற்றாண்டின் இடைப் பகுதியில் அனங்கபால தோமாரன் ஆட்சி வரையிலும் அது சிறப்புற்று விளங்கவில்லை. மக்களில் பலர் இன்றளவும் டில்லி ஆதியிலேயிருந்து இந்தியாவின் தலைநகராக இருந்தது என்று தவறாகவே எண்ணுகிறார்கள். டில்லி இந்து வரலாற்றில் டில்லி முக்கிய இடம் பெறவில்லை.

கி.பி. 1206 முதல் 1526 வரை டில்லி இந்தியாவை ஆண்ட சுல்தான்களின் தலைநகராக இருந்தது. பின்னர் கி.பி. 1648இல் ஷாஜகான் ஆக்ராவிலிருந்து தலைநகரை டில்லிக்கு மாற்றினார். அது 1858 வரை நீடித்தது. 1912இல் புதிய டில்லி இந்திய அரசின் தலைநகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கி.பி. 1517இல் இப்ராஹிம் லோடி (Ibrahim Lodi) அரியணை ஏறி னார். அவரது ஆட்சி டெல்லி, ஆக்ரா, டோஆப் (Doab) ஜானபுரி (Jaunpur) பீஹாரின் ஒரு பகுதி, பெயானா (Bayana) சந்தேரி (chan-deri) ஆகிய பகுதிகளில் இருந்தது.

இப்ராஹிம் லோடி மூட அரசர். தனது அரச அவையில் தளர்ச்சியற்ற சடங்குகளையும், ஒழுங்கையும் வற்புறுத்தினார். தனது தந்தையுடனும், பாட்டனாருடனும் சரிசமமாக ஒரே சமுக்காளத்தில் உட்கார்ந்திருந்த ஆப்கானியப் பிரபுக்களைத் தனது அவையில் குனிந்து கை கட்டிக் கொண்டு நிற்கும்படி செய்தார். பரம்பரை பரம்பரையாகப் பிரபுக்கள் அனுபவித்த உரிமைகளையும் மறுத்தார். அத்தோடு அவர்களுக்கு கடுந் தண்டனையையும் விதித்தார்.

லோடி, நியாஸி, லெஹானி, ஃபர்மூலி, பிரிவினைச் சேர்ந்த உயர்தர ஆப்கானியர்கள் இப்ராஹிம் லோடியை எதிர்த்தனர். குழப் பமும் பீதியும் பெருகியது.

இப்ராஹிம் லோடியின் சிற்றப்பன் ஆலம்கான் லோடி டெல் லியின் சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடினார். பிரபுக்கள் பலர் அதை ஆதரித்தனர்.

பஞ்சாபின் கவர்னர் தௌலத்கான் லோடி இப்ராஹிம் லோடி அரசை எதிர்த்தார். அத்தோடு தானே மன்னரைப் போல நடந்தார்.

பீஹாரின் பிரபுக்கள் தர்யாகான் லொஹானி என்பவரின் கீழ் இப்ராஹிம் லோடியை எதிர்த்தனர். அவர் மறைந்ததும் அவரது மகன் பகதூர்கான் (Bahadur khan (1521) தானே ராஜா என்று அறி வித்து இப்ராஹிம் லோடியை எதிர்த்தார்.

ஜானபுரியில் நசீர்கான் லோஹாரி, மாரூப் ஃபர்மூலி ஆகியவர் கள் தலைமை ஏற்க ஆப்கானியர்கள் கிளர்ந்தெழுந்தனர். லோடி சாம்ராஜ்யம் கலகலத்து இருந்தது. இப்ராஹிம் லோடி மதிப்பிழந்து இருந்தான்.

பஞ்சாப் ஆளுனராயிருந்த தௌலத்கான் பஞ்சாப் அரசராக ஆசை கொண்டு, தனக்கு உதவுமாறு பாபரை வேண்டினார். அதற்கு கைமாறாக பாபரை தமது அரசராக ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி அளித்தார்.

இப்ராஹிம் லோடியின் உறவினரான ஆலம்கான் டில்லியின் சுல் தானாகும் நப்பாசையால் பாபருடன் தொடர்பு கொண்டார். மேவார் நாட்டு மன்னன் ராணா சங்கா பாபரின் உதவியைக் கோரினார். இவ்வாறு பாபரின் உதவியை நாடி அவரை இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டி வரச் சொன்னார்கள்; அதன் தொடர்ச்சி யாக பாபர் வந்தார்; வென்றார்.

“At this time he received an invitation from Daulatkhan Lodi, governor of the Punjab, who being on bad terms with Sultan Ibrahim of Delhi, sought his help in making himself master of the Punjab in return for a promise to recognize Babur as his sovereign. Babur readily accepted the invitation and proceded towards Lahore as the head of a powerful force in 1524.

பஞ்சாபின் கவர்னர் தௌலத்கான் லோடியிடமிருந்து பாபரின் உதவியை வேண்டி அழைப்பு வந்ததை Ashirbadilal srivastava (A.L. ஸ்ரீவஸ்தவா) The Mughul Empire, Agra, நூலில் பக்கம் 13ல் விவரித் துள்ளார்.

“உடலெங்கும் எண்பது விழுப்புண்கள், ஒரு கண்ணில் பார் வையின்மை, இடது கையில் சுவாதீனம் குறைவு, சற்று விந்திய நடை... இதெல்லாமே பல போர்களில் பெற்ற வீரப்பரிசுகள்... ஆனால் குதிரையில் வாளேந்தி அமர்ந்தாலோ ஒரு பறக்கும் எரி மலை. இதுதான் சித்தூர் அரசர் மாவீரர் ராணா சங்கா. அவர் தலைமையில் இன்றைய போபால் அருகே உள்ள, சந்தேரி நாட்டு மன்னர் மெதினிராய், பானிப்பட் போரில் மறைந்த இப்ராஹிம் லோ டியின் சகோதரர் முகமது லோடி மற்றும் சில இந்து, முஸ்லிம் குறு நில மன்னர்கள் அணிவகுக்க அவர்கள் பின்னால் நூற்று இருபது தளபதிகள், 80,000 குதிரை வீரர்கள், 500 யானைப் படை வீரர்கள், பாபரை எதிர்த்து மொத்தமாகக் களத்தில் நின்றனர்... வட இந்தி யாவில் உள்ள ஒவ்வொரு ராஜபுத்திரக் குடும்பமும் ஒரு ஆண் மகனையாவது கன்வா கிராமத்தில் நடந்த இந்த யுத்தத்தில் இழந் ததாக வரலாற்றில் கூறப்படுகிறது. ரத்தக் காயங்களோடு யுத்த

களத்திலிருந்து தப்பித்த ராணா சங்கா மனம் உடைந்து ஓராண் டுக்குப் பிறகு எங்கோ அநாதை போல இறந்ததாகத் தகவல்''... இது மதன் எழுதிய வந்தார்கள் வென்றார்கள் நூலில் பக்கம் 66 இல் உள்ளது. (3ஆம் பதிப்பு செப்டம்பர் 1994) (முதற்பதிப்பு ஜனவரி 1994). அதே நூலில் பக்கம் 64இல் மதன் இன்னும் எழுதுகிறார்:

''ஒருவரை மட்டும் பாபரால் வழிக்குக் கொண்டு வரமுடிய வில்லை! அவர் சித்தூரைத் தலைநகராகக் கொண்டு மேவார் நாட்டை ஆண்டு வந்த ராஜபுத்திர மாவீரர் ராணா சங்கா.

'நமக்குள் ஆயிரம் சண்டையிருக்கலாம். ஆனால் ஒரு அந் நியர் இந்தியாவைக் கைப்பற்றியிருப்பதை நாம் அனுமதிக்கலாமா?' என்று அவர் மற்ற பல இந்திய மன்னர்களுக்கு கடிதங்கள் மூலம் வலியுறுத்திக் கொண்டே இருந்தது கடைசியில் பலனளித்தது.

ராணாவிடம் விசுவாசம் மிகுந்த சந்தேரிப் பகுதியை ஆண்டு வந்த ராஜபுத்திர வீரர் மெதினிராய், ராணா சங்காவை வழி மொழிந்து மேவார் படையுடன் தன் படையை இணைத்துக் கொண்டார். அதைத் தொடர்ந்து ஹசன்கான் என்ற சிற்றரசரும், இப்ராஹிம் லோடியின் சகோதரரான முகமது லோடியும் ராணாவின் தலைமையில் கூட்டணி அமைக்க திரண்டெழுந்த ஒரு பெரும் படை பாபருக்கு எதிராக அணிவகுத்து முரசு கொட்டியது.''

பாபரை எதிர்த்து நிற்கும் ராணா சங்கா முதலில் என்ன செய் தார் தெரியுமா? அதுபற்றி மதன் நூலில் குறிப்பு இல்லை. உண்மை வரலாறு என்ன?

ராணா சங்கா குறித்து கர்னல் ஜேம்ஜ் டாட் Annals and antiquities of Rajasthan or the central and western rajput states of India நூலில் (1971 வருடப் பதிப்பு,) முதல் வால்யூம் பக்கம் 358இல் புகழ்ந்துரைப்பார். One eye was lost in the broil with his brother... while he counted eighty wounds from the sword or the lance on various parts of his body.

எண்பது வெட்டுக்காயங்கள் மேனியில் கொண்ட மாவீரர் ராணா சங்கா. அவரது வாழ்க்கை வரலாற்றை Har bilas sarda F.R.S.L அஜ்மீரில் இருந்து 1981இல் வெளியிட்ட நூல் Maharana Sanga the Hindupat, the Last Great leader of the rajput Race.

அந்த நூலில் பக்கம் 118இல் "At length, Daulatkhan Lodi, the Governor of Lahore, invited Babur, the king of kabul to take possession of hindustan. Babur had before this made unsuccessful attempts to take the Panjab. He says in his autobiography that Maharana Sanga had also sent him a message to the effect that should he (Babur) advance and take Delhi, he (Sanga) would take Agra from the Lodi king Finding the circumstances favourable, Babur left Kabul, took a part of Panjab and advanced towards Delhi."

ராணா சங்கா பாபரை இந்தியா மீது படையெடுத்து வரச்சொன்னாரா? இல்லையா?

ஹர்பிலாஸ்சர்தா தனது நூலில் பாபரின் சுயசரிதையில் ராணா சங்கா தன்னை படையெடுத்து வருமாறு அழைத்ததை குறிப்பிட்டுள்ளார்.

முகலாய மன்னர் பாபரின் சுயசரிதையை எளிய தமிழில் ஆர். பி.சாரதி, மதி நிலையம் சென்னை சார்பில் டிசம்பர் 2011இல் 624 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் ராணா சங்கா பற்றி பல செய்திகள் வருகின்றன. எனது பார்வையில் ராணா சங்கா பாபரை அழைத்தது பற்றிய செய்தி அகப்படவில்லை.

Babur - Nama (memoirs of Babur) Translated from the original turkish text of zahiru'd-din muhammad babur Padshah Ghazi by Annette Susannah Beverdge two volumes boud in one என்ற நூலில் (1921 ஆகஸ்ட்டில் 61 பக்கங்களைக் கொண்ட முன்னுரையுடன், நூல் 716 பக்கங்களும், பின் இணைப்புகள் 81 பக்கங்களில் Index 164 பக்கங்களில் மொத்தம் 1022 பக்கங்களில் வெளிவந்துள்ளது. தமிழில் வந்த பாபர் நாமா 624 பக்கங்கள் மட்டுமே) பக்கம் 529 இல் வரும் குறிப்பு இதோ.

பாபர் எழுதுகிறார்:

"while we were still in kabul Ranasanga had sent an envoy to testify to his good wishes and to propose this plan: "If the honoured Padshah will come to near Dihli (Delhi) from that side I from this will move on to agra'

ராணா சங்கா தனது அரசுத் தூதரை அல்லது ஒரு அரசரால் மற்றொரு நாட்டிற்கு தூது அனுப்பப்படுபவரை (Envoy) பாபர் இருக்

குமிடத்திற்கு, காபூலுக்கு, அனுப்பி வைத்தார். தனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்திடச் சொன்னார். தனது திட்டமான, பாபர் புறப்பட்டு டில்லி அருகே வரும்போது, ராணா சங்காவாகிய நானும் புறப்பட்டு ஆக்ரா நோக்கி வருவேன்' என்று பாபருக்கு தூது அனுப்பி ராணா சங்கா பாபரை வரச் சொன்னாரா? இல்லையா?

அதனால்தான் சொல்கிறோம் வரச் சொன்னார்கள்... வந்தார்கள்... வென்றார்கள் என்று.

பேராசிரியர் கோ.தங்கவேலு இந்திய வரலாற்றை மூன்று தொகுதிகளாக 1971களில் வெளியிட்டார். அதன் மூலப் பிரதிகள் இப்போது பலவாறாக மாற்றப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தற்போது பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டு வரும் கோ.தங்கவேலுவின் இந்திய வரலாறு தொகுதி மூன்றில் (2007) பக்கம் 21இல் பாபரின் வெற்றிக்கு காரணங்கள் என ஒன்பது சொல்வார். அதில் 8வதாக கூறுவது,

"ராணாசங்கா போன்ற இராசபுத்திரர்களும், லோடியின் விரோதிகளும் பாபரை வரவேற்றனர்"

வரலாற்றின் உண்மை நிலை விளங்குகிறதல்லவா? மறைக்கப்படும் செய்திகள் புரிகிறதல்லவா!

வெற்றி செயலற்ற தன்மையைச் சகித்துக் கொள்ளாது; மிக விரைந்து செயல்படுபவனுக்கே உலகம் உரியது. ஒருவன் தலைவனாய் இருக்கும் போது எல்லாவற்றிலிருந்தும் ஓய்வெடுத்துக் கொள்ளலாம், அரசனாக இருக்கும் போது தவிர, என்று வாழ்ந்து காட்டியவர் பாபர். மானத்தை இழந்து நாம் வாழ்வதை விட சாவதே மேல். புகழுடன் இறப்பதென்றால் நான் நிறைவடைவேன். என் வாழ்க்கையை நான் இழந்தாலும் புகழ் என்னுடையதாக இருக்கும்.

Were the sword of the world to leap forth It would cut not a vein till God will.

உலகத்தின் வாள் அதனிடத்திலிருந்து அசைந்தாலும், அல்லாஹ் விரும்பினாலன்றி அது ஒரு ரம்பையும் அறுக்காது என்பார் பாபர். இதனை The Tuzuk -i-Jahangiri Translated by rogers, edited by Hel beveridge 2 volumes, (R.A.S. London) நூலில், முதற் தொகுதி பக்கம் 348லும் காணலாம்.

தன் வாழ்வின் இறுதிவரை இறைவனையே நம்பி போராடி இந்திய சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்ற பாபரை இந்தியா விலிருந்துதான் வரச் சொன்னார்கள்; பாபர் வந்தார்; வென்றார். இதுவே சரித்திரத்தின் சத்தியத்தின் பக்கங்கள்.

வரலாற்றாசிரியர் ஸ்டான்லி லேன்பூல் கூறுவது போல், “Babur was dead; but he had done what nothing could efface.

Death makes no conquest of this conqueror, for now he lives in fame.

பாபர் இறந்து விட்டார் என்ற போதிலும் அவர் காலத்தால் அழிக்க முடியாத செயற்கரிய செயல்களைச் செய்துள்ளார். இறப் பும் இந்த வெற்றியாளனை வெற்றி கொள்ளவில்லை.

இன்னமும் இவன் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

(Stanley lane poole, babar, Ist Edition 1899 Delhi 3rd edition 1971. page 200)

மாலிக்காபூரை வரச்சொன்ன சுந்தரபாண்டியன்

உலகில் பழம்பெருமை வாய்ந்த நாடுகளில் தமிழ்த் திருநாடும் ஒன்றாகும். பாட்டங்கொற்றனைக் கருவூர்க் கதப்பள்ளிச் சார்ந்தருர் பாடிய புறநானூறு 168 பாடலில், 'வையக வரைப்பில் தமிழகம் கேட்ப' என்பார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை மேட்டூர்க்கண்ணனார் பாடிய பதிற்றுப்பத்து இரண்டாம் பத்து பதி கத்தில் 'இமிழ்கடல் வேலித் தமிழகம் விளஸ்கதி' என்று பாடுவார். இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில் 'இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய' என்றும் 'பாண்டியநாடு' எனவும் பேசுவார். வியாசர் இயற்றிய மகாபாரதத்தில் அர்ச்சுனன் பாண்டியர் குலம களை மணந்த செய்தி உள்ளது. இலங்கை மகாவம்ச நூல் கி.மு. 478 இல் தமிழ் வேந்தன் விஜயன், பாண்டிய மன்னன் மகளை மணந்ததாகச் சொல்கிறது. கௌடில்யர் அர்த்தசாஸ்த்திரத்தில் பாண்டிய நாட்டு முத்துக்கள் பேசப்படுகிறது.

கிருஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பாணினி இயற்றிய இலக்கண நூலில் 'பாண்டிய' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறியுள்ளார்கள். (தலைசிறந்த பாண்டிய மன்னர்கள், சு.கி. பரந்தா மனார், நாகர்கோவில், 1960 பக். 3) தமிழகம் இருபுறம் கடலாலும், தெற்கே குமரி (கடல்தான்) நிலப்பகுதியாலும் சூழப்பட்டது. மதுரைக் குத் தெற்கே பாண்டியர்கள், தஞ்சை, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் பகுதியில் சோழர்கள், தற்போதைய கேரளப்பகுதியில் சேரர்கள் ஆட்சிபுரிந்தார்கள் என்று தோராயமாகக் கொள்ளலாம்.

'தமிழுக்குச் சங்கம் அமைத்தாய் தமிழருள் சிங்கம் நிகர்ந்தாய்' என பாண்டிய மன்னர்களை முனைவர் க.ப.அறவவணன் போற்றி மகிழ்வார்.

பாண்டிய வரலாறு நீண்ட நெடியது, பாரம்பரியமிக்கது. கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கே நடந்த தாயாதிச் சண்டையில் பாண்டிய அரசர்கள் முஸ்லிம் அரசர்களை உதவிக்கு அழைத்து வரச்சொன்னது குறித்த வரலாற்றுச் சம்பவம் இதோ.

மாறவர்மன் குலசேகர பாண்டியனது ஆட்சியின் இறுதிக்காலம் அமைதி நிறைந்ததாகப் பெறவில்லை. மாறாக அமைதி குறைந்த காலமாகக் காணப்பட்டது. குலசேகரபாண்டியருக்கு சுந்தரபாண் டியன், வீரபாண்டியன் என்ற புதல்வர்கள் இருந்தனர்.

சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன். வீரபாண்டியன் வேறு மனைவியின் புதல்வன். சடையவர்மன் வீரபாண்டியனுக்கு கி.பி.1296இல் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டது. துளுவ அரசப் பகர ஆளுநராக இணிகீனுஞ்னுணஞிதூ ஆனார். இவர் பதவிக்கு வந்த ஐந்து அல்லது ஆறு வருடங்களில், சுந்தரபாண்டியனும் அரசப்பகர ஆளுநராகப் பொறுப்பேற்றார். 1310இல் தன் தந்தையைக் கொன்று மதுரை மாநகரில் அரியணை ஏறினார் சுந்தரபாண்டியன். (பாண் டிய வரலாறு, டி.எச். சதாசிவப் பண்டாரத்தார், 1977, பக். 113).

குலசேகரபாண்டியரது மக்கள் இருவருக்கும் ஏற்பட்ட பகைமை உணர்ச்சியும், பட்டத் தகராறும் பாண்டிய நாட்டில் உள் நாட்டுப் போரினை உருவாக்கியது. நாடு குழப்பத்திற்குள்ளானது. கி.பி. 1310 ஹிஜிரி 710 இல் வீரபாண்டியன் பெரும் படையைத் திரட்டி சுந்தரபாண்டியனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தான்.

இப்படையினைக் கண்டு சுந்தரபாண்டியன் நடுநடுங்கினான், அஞ்சினான், தாய் நாட்டினின்றும் ஓட்டம் பிடித்தான், டில்லியி லுள்ள அலாவுதீன் கில்ஜியிடம் அடைக்கலம் புகுந்தான். (ம.இரா சசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு, முதல் பாகம், சென்னை 1978, பக்கம் 534)

‘‘மதுரையை விட்டுத் துரத்தப்பட்ட சுந்தரபாண்டியன் ஓடினான்; உதவியை நாடினான். இறுதியில் டில்லிப் பேரரசை ஆண்டு வந்த அலாவுதீன் காலடியில் வீழ்ந்தான். சுந்தரபாண்டியன் டெல்லி சென்று சுல்தானின் உதவியை நாடியிருக்க வேண்டும். அல்லது தென்னிந்தியாவில் தனது படையெழுச்சியினை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டிருந்த மாலிக்காபூரைச் சந்தித்து அவனிடம் முறையிட்டிருக்க வேண்டும். இதனையே நல்லதொரு வாய்ப்பாகக் கொண்டு மாலிக்காபூர் மதுரையின் மீது படையெடுத்தான் என்று வாசப் கூறினார். (முற் கூறிய நூல் பக்கம் 537)

முஸ்லிம் வரலாற்றிஞரான அமிர் குஸ்ரு வாசப்பின் கருத்தினை உறுதி செய்கிறார்.

'இது காறும் ஒற்றுமையாக மாபார் பகுதியினை ஆண்டு வந்த மூத்தவரான வீரபாண்டியனும், இளையவரான சுந்தர பாண்டியனும் தங்களுக்கு முன் வேறுபட்டு, மாறுபட்டு போர்க்கோலம் பூண்டுள்ளனர் என்று மாலிக்காபூரிடம் கூறப்பட்டதாக அமீர்குஸ்ரு குறிப்பிட்டுள்ளார். (Elliot and Dowson, History of India as told by her own historians vol. 3. p. 88. (1871)

மாலிக் காபூர் வீரபாண்டியனை எதிர்த்துப் போரிட வந்தபோது, நேருக்குநேர் நின்று எதிர்த்துப் போரிடாமல் அலைக்கழித்து களைக்க வைத்து, வலிமையினை குறைத்திடச் செய்தான் வீர பாண்டியன். போர் முற்றாக முடியவில்லை. போர்க்களக்காட்சிகள் விவரிக்கப்போவதுமில்லை.

"சுந்தர பாண்டியனும், வீரபாண்டியனும் இகல் (பகை) கொண்டு பாண்டிநாட்டை ஆண்டுள்ளமை பல ஆதாரங்களால் தெரிகிறது. இவருள் முன்னவன் (சுந்தரபாண்டியன்) அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவருமான மாலிக்காபூரைத் தொன்னாட்டின் மீது படையெடுக்குமாறு அழைத்திருக்கிறான்' இது டாக்டர். மு. கோவிந்தசாமியார் கூற்றாகும். (பாண்டியர் வரலாறு, சிதம்பரம் 1997, பக்கம் 77)

வீரபாண்டியன் சுந்தரபாண்டியன் பகைமையில் நடந்தது என்ன?

"பாண்டிய அரசர்கள் தங்களுக்குள் உள்ள பகைமையை மிகைப்படுத்திக் கொண்டதோடல்லாமல், அப்படையெடுப்புக்கு உறு துணையாகவும் நின்றனர். சுந்தரபாண்டியன் மாலிக்காபூரின் உதவியை நாடினார்." (டாக்டர்.கே.வி.இராமன், பாண்டியர் வரலாறு, சென்னை, 1977, பக்கம் 125, 126).

சுந்தரபாண்டியன் நேரடியாக டில்லி சுல்தானிடம் முறையிடவில்லை என்றும் அவனது படைத்தலைவனான மாலிக் காபூரிடம் சரண் அடைந்திருக்க வேண்டும் என்றும் டாக்டர். எஸ். கிருஷ்ண சுவாமி அய்யங்கார் கருதுகிறார். (Sundara Pandya thus driven from the throne looked out for help and sought the assistance of the Sultan of Delhi either at head quarters directly or with the Naib of the Sultan, Malik Kafur, who was then

in the South' (S.Krishna Swami Aiyangar, South India and her Muhammadan invaders, First edition 1921. AES Reprint, 1991, Delhi Page 96)

சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியிடமோ அல்லது அவனது தளபதி மாலிக்காபூரிடமோ தனக்கு உதவிகேட்டு, படையெடுத்து வரச்சொன்னது குறித்து டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் கூற்றைத் தொடர்ந்து மேலும் சில செய்திகளைப் பார்ப்போம். பாண்டிய ராஜவம்ச சரித்திரம் முதற்பகுதி முற்பட்ட பாண்டியர். (88 பக்கங்கள்), இஃது அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ் கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர். மகாஸ்ரீ W. அரிகரமையரவர்களால் இயற்றப் பெற்று தென்காசி தாலூகா இலஞ்சி மிட்டதார் மகாஸ்ரீ ஐ.கு.இராமசாமியாபிள்ளை பொருளுதவியால் அம்பாசமுத்திரம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பிரஸ்ஸில் 1926இல் பதிப்பிக்கப் பெற்றது. இரண்டாம் பகுதி இடைப்பட்ட பாண்டியர் பற்றியது. இதில் சுந்தர பாண்டியன் தனது தந்தையைக் கொன்றதை நூலில் 61வது பக்கத்தில் கூறியுள்ளார்.

மூன்றாம் பகுதியில் பிற்பட்ட பாண்டியர் பற்றி 92 பக்கங்களில் கூறியுள்ளார். அவர் குலசேகரபாண்டியன் கொலையைப் பற்றி மட்டுமே சொல்லியுள்ளார். சுந்தரபாண்டியன் குறித்து விரிவாகச் சொல்லவில்லை. எம்மண்டலமுங் கொண்ட குலசேகரபாண்டியன் அல்லது தந்தா பஹரணம் எனும் நூலை முற்கூறியவாறே 1926இல் அரிகரமையர் வெளியிட்டுள்ளார். 99 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் குலசேகரபாண்டியன் கொலையுண்டதும், சுந்தரபாண்டியன் ஆட்சியும் என்று பக்கம் 97, 98, 99 இல் விவரித்துள்ளார்.

ஆக குலசேகரபாண்டியன் கொலை செய்யப்பட்டது உண்மை, பாண்டிய அரச குடும்பத்தில் குழப்பங்கள் இருந்ததும் உண்மை. (Vira Pandya defeated his brother who fled northwards and asked for assistance from the Sultan of Delhi or his General Kafur) பாண்டிய அரசர்கள் டில்லி அரசரிடமோ அல்லது அவரது தளபதி மாலிக்காபூரிடமோ உதவி கேட்டதை, போருக்கு வரச் சொன்னதை History of South India, (Ancient, Medieval & Modern) P.N. Chopra, T.K.Ravindran. N.Subrabmanian எழுதிய நூலில் டில்லி 2003இல், Past Medieval Period பக்கம் 9, 10இல் தெளிவாகக் கூறியுள்ளார்.

“வீரபாண்டியனால் தோற்கடிக்கப்பட்ட சுந்தரபாண்டியன் டெல்லிக்கு ஓடினார். அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார்.

அலாவுதீன் மாலிக்காபூரைப் படையுடன் மதுரையைக் கைப்பற்ற அனுப்பினார்.''

இது டாக்டர் ந.க.மங்கள முருகேசன் கூற்று (பாண்டியர் வரலாறு, சென்னை, 1998, பக்கம் 102)

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய டாக்டர் கு.அ.கி. ஹுசைனி (Husaini) The History of the Pandya Country ஆங்கில நூலை காரைக்குடியிலிருந்து 1962இல் 192 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் பக்கம் 53, 54இல் சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியை டில்லியில் சந்தித்து உதவி கோரியதையும், அலாவுதீன் மாலிக்காபூரிடம் சுந்தரபாண்டியனுக்கு உதவிட உத்தரவிட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

''சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூரைத் தென்னாட்டின் மீது படையெடுத்து வருமாறு அழைத்தமை குறிப்பிடத்தக்க சான்றாகும்' என்று தமது பாண்டியர் வரலாறு நூலில் தி.ப.சதாசிவப் பண்டாரத்தார் (பக்கம் 115) குறிப்பிட்டுள்ளார்.

''சுந்தரபாண்டியன் டெல்லியில் ஆட்சி செய்து வந்த அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூரிடம் மதுரைக்கு வந்து தனக்கு பாண்டிய அரியணையை மீட்டுத் தருமாறு கோரிக்கை வைத்தார். மாலிக் காபூரின் படை மதுரை நகரை சூறையாடியது.''

இது டாக்டர். மு.ராஜேந்திரன் ஐஅகு தொகுத்த பாண்டியர் காலச் செப்பேடுகள் (2012, வந்தவாசி பக்கம் 63) நூலில் சொல்லப்பட்டுள்ள செய்தியாகும்.

வரலாற்றாசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி The Pandyan Kingdom எனும் ஆங்கில நூலை 1929லும், மறுபதிப்பு 1972இலும் வெளியிட்டார். 250 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 181இல் முற்கூறிய டாக்டர் எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் கூற்றையே வலியுறுத்தியுள்ளார்.

பாண்டியர் காலத் தமிழ் மக்கள் வரலாறு நூலில் டாக்டர் க.ப. அறவாணன் (சென்னை 2012, 245 பக்கங்கள்) பக்கம் 36இல் 'சுந்தரபாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் நடந்த போரில் தனக்கு உதவ அலாவுதீன் தளபதி மாலிக்காபூரை 1311 ஏப்ரல்

மாதம் சுந்தரபாண்டியன் மதுரைக்கு அழைத்து வந்தான்' என்று குறிப்பிட்டுள்ளார்.

"மாலிக்காபூர் தென்னிந்தியாவிற்கு வர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த போது துவார சமுத்திரத்திற்குச் சென்று சுந்தரபாண்டியன் மதுரைக்கு வர அழைப்பு விடுத்தான்" என்று தம்பி எம்.எம். தீன் தனது மாறவர்மன் குலசேகரபாண்டியன் நூலில் (சென்னை 2016, பக்கம் 155) குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு வரலாறு நூல் உருவாக்கிடத் திட்டமிட்டு 1975இல் தமிழக அரசால் 'தொல் பழங்காலம்' எனும் நூல் தொகுதி வெளியிடப்பட்டது.

சங்க காலம் (1983)

பல்லவர் பாண்டியர் காலம் முதல் தொகுதி (1991)

இரண்டாம் தொகுதி (1997)

சோழப் பெருவேந்தர் காலம் முதல் தொகுதி 1998

இரண்டாம் தொகுதி (ஆண்டு இல்லை) பாண்டியப் பெருவேந்தர் காலம் (2000) வெளிவந்தது. அதனைத் தொடர்ந்துள்ள தொகுதிகள் இன்னும் வரவில்லை.

பாண்டியப் பெருவேந்தர் காலம் நூலில் முன்னுரை எழுதிய முனைவர் தமிழ்க் குடிமகன் 'இராசராச சுந்தரபாண்டியன்தான் மாலிக்காபூரை வரவழைத்தான் என்ற உண்மையும் இந்த நூலால் விளங்கி விடுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

மாலிக்காபூர் படையெடுப்பு பற்றி நூலின் பக்கம் 22இல் இருந்து துவங்குகிறது. சடையவர்மன் இராசராசன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1310 1332). இவன் கி.பி. 1311இல் டில்லியிலிருந்து படையெடுத்து வந்த மாலிக்காபூருடன் சேர்ந்து கொண்டு அவனுக்கு உதவி புரிந்திருக்க வேண்டும் என்று பக்கம் 26இல் குறிப்பிடப்படுகிறது.

குலசேகரனின் மூத்த மகன் வீரபாண்டியனும் (1297), கடைசிச் சகோதரன் சுந்தரபாண்டியனும் (1303) இருந்ததுடன் இன்னொரு சுந்தரபாண்டியன் இருந்தான். இவனே முஸ்லிம் தளபதிகளுடன் சேர்ந்து கொண்டான் என்றும் அந்த நூல் பக்கம் 26 கூறுகிறது.

தினமணி கதிரில் பல ஆண்டுகளுக்கு முன்பு பழம் பாடலில் பாண்டியனின் புதிய சரிதை' எனும் கட்டுரை தெற்கில் ஒலித்த தீன் குரல் சம்பந்தமாக அடியேன் எழுதினேன். அப்போது எளியேனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சில செய்திகள் கேட்டறிந்தவர் திரு.சேதுராமன். இவர் கும்பகோணம் நாகேஸ்வரம் வடக்குத் தெருவில் வசித்தவர், ராமன் ராமன் பஸ் அதிபர். பாண்டியர் வரலாற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

7.1.1985, 8.1.1985, 9.1.1985 நாட்களில் தார்வாரில் (Dharwar) நடைபெற்ற (கர்நாடக பல்கலைக்கழகம்) The Epigraphical Society of India கருத்தரங்கில் சடாவர்மன் ராஜராஜன் சுந்தரபாண்டியன் எனும் ஆய்வுக் கட்டுரையை வாசித்தார். பின்னர் 1989ல் பாண்டியன் வரலாறு கி.பி. 570-1371 எனும் தமிழ் நூலை 252 பக்கங்களில் டபுள் டம்மியில் வெளியிட்டார். அந்த நூலில் பக்கம் 176இல் கே.வி. ராமன் 1978இல் வெளியிட்ட The Imperial Pandyas நூலில் இராஜராஜன் சுந்தரபாண்டியன் 1313இல் முடிசூடினான் என்று எழுதியுள்ளேன். எனினும் மனதில் சமாதானம் ஏற்படவில்லை. மீண்டும் மீண்டும் ஆய்ந்ததில் சுந்தரனின் துவக்க ஆண்டு 1310 என்பதை அறிந்தேன். இம்மாதிரியான மிகக் கடுமையான அடிப்படை ஆய்வுகளில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. இதனால் சரித்திரத்தின் போக்கை நன்கு அறிந்து கொள்ள முடியும் என்பார்.

பாண்டியர் வரலாறு நூலில் பக்கம் 185ல் வீரபாண்டியன், அவனுடைய தம்பி சுந்தரபாண்டியன், இவர்களுடன் சண்டையிட்ட இராஜராஜன் சுந்தரபாண்டியன் துருக்கருடன் (முஸ்லிமுடன்) சேர்ந்து கொண்டார். இராஜராஜன் சுந்தரபாண்டியன் குலசேகரனின் மகன் என்பதாக கல்வெட்டுக்கள் கூறவில்லை. அப்படியானால் இவன் யார்? ஒருவேளை குலசேகரனின் தம்பியின் மகனாகவும் இருக்கலாம். இவ்வாறு கருதக் கூடிய நிலையில திருக்கடையிலும், இளையான்குடி கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன என்கிறார். (Kanchipuram 312 of 1955 A.R.E.1954, 1955, Page 16)

இனி நமது விஷயத்திற்கு வருவோம். இங்கு பாண்டிய மன்னன் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், யாருடைய மகனாகவாவது இருக்கட்டும்.

பாண்டியர்களுக்கு இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் ஒரு மன்னர் பரம்பரையைச் சேர்ந்த பாண்டியர் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு படையெடுத்து வரச்சொன்னார்களா? இல் லையா? இதற்கு என்ன ஆதாரம்? சான்று? கல்வெட்டு ஆதாரமே இருக்கிறது.

அன்றைய தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம் திருக்களர் என்னும் ஊர் தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். இவ் வூரில் உள்ள சிவன் கோயிலிலிருந்து சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. கல்வெட்டைப் பார்ப்போம். "ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடை பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வல்லப தேவர்க்கு யாண்டு 25வது மேஷ நாயற்று பூர்வபட்சத்து ஏகாதசியும் சனிக்கிழமையும் பெற்ற மகத்துநாள்..." என்று துவங் கும் கல்வெட்டின் வரி 16இல்

'முன்னாள் இராஜராஜன் சுந்தர பாண்டிய தேவர் துலுக்கருடன் (முஸ்லிமுடன்) வந்த நாளிலே ஒக்கூருடையாரும், இவனுடைய தம்பிமாரும் அனைவரும் அடியாரும் செத்தும், கெட்டும் போய் அலைந்து உளரும் வெள்ளத்தாலும், கலகத்தாலும் பாழாய் இருக் கிற அளவிலே....' சடையவர்மன் ஸ்ரீவல்லபனுக்கு உரிய இக்கல் வெட்டினை கே.வி. ராமன் ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

(Tirukkalar inscription No. S.I.I. VIII. 247 (642/1902) belongs to Jatavarman Sri Vallaba. Lines 16 to 20 of this records take as follows, It means that "in those days when Raja Rajan Sundar Pandya Deva came with the Muhammadans (Muslims) Okkurudaiyar, his brothers, others and the devotees perished; also (when) the village was devastated due to floods and rioting...

எந்த மன்னனாக இருக்கட்டும். அவரது ஆய்வுப்படி காலம் கொஞ்சம் பின்னால் இருக்கலாம். நாம் கூறுவது,முன்னாள் இரா சராசன் சுந்தரபாண்டிய தேவர் துலுக்கருடன் வந்த நாளிலே... என்று திருக்களர் சிவன் கோயில் கல்வெட்டு தரும் அழிக்க இய லாத, வரலாற்றாசிரியர்கள் எவரும் மறந்திட இயலாத சான்றாகும்.

அதனால்தான் நாம் சொல்கிறோம், மதுரைக்கு, அதாவது பாண்டி நாட்டிற்கு கி.பி. 1311 அல்லது 1333, 14ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தங்களது உள்நாட்டுக் குழப்பத்தில் ஒருவருக்குச்

சாதகமாக வந்து போரிட வாருங்கள் என்று அழைத்தது, வரச் சொன்னது, தெள்ளத் தெளிவான வரலாற்றுச் சான்றாகும்.

16ஆம் நூற்றாண்டில் முகலாய பாபரை வரச்சொன்னது ராணா சங்கா.

14ஆம் நூற்றாண்டில் டில்லி சுல்தானை அல்லது அவரது தளபதியை வரச் சொன்னது பாண்டிய மன்னர்கள்.

இப்போது நாம் சொல்வது சரியாக இருக்கிறதா?

வரச்சொன்னார்கள்... வந்தார்கள்... வென்றார்கள்... என்று.

முகம்மது கோரியை வரச்சொன்ன ஜெயச்சந்திரன்

கி.பி.997 இல் கஜினியின் அரியணையில் ஏறியவர் முஹம்மது. வரலாற்றில் இவரே முஹம்மது கஜினி என்று அழைக்கப்படு கிறார். கி.பி.1030இல் இவர் மறைந்தார். கஜினி பேரரசு வீழ்ச்சிய டையத் துவங்கியது. கோரி (கோர்) (Ghor) வம்சத்தினர் படிப்படியாக வலிமை பெற்றனர். அலாவுத்தீன் உசேன் கோரி நாட்டின் அரசர் ஆனார். 1161இல் கியாஸ் உத்தீன் கோரி அரசர் ஆனார். கி.பி. 1173இல் கஜினியைக் கைப்பற்றி தன்நாட்டோடு இணைத்தார். தனது தம்பி ஷியாப் உத்தீனை கஜினியின் தலைவராக்கினார். அந்த ஷியாப் உத்தீனே இந்திய வரலாற்றில் சிறப்புப் பெற்ற கோரி முஹம்மது ஆவார்.

அந்த வேளையில் டெல்லி, அஜ்மீர் பகுதியை இராஜபுதனத்து அரசர் பிருதிவிராஜன் ஆட்சி செய்தார். கன்னோசி பகுதியை ஜெயச்சந்திரன் ஆண்டு வந்தார். 'சம்யுக்தை' பேரழகி, ஜெயச்சந்தி ரனின் மகள். எப்படியோ பிருதிவிராஜன் மீது காதல் கொண்டுவிட் டாள். ஜெயச்சந்திரன் இதனை விரும்பவில்லை. பிருதிவிராஜன் குதிரையில் பாய்ந்து வந்து அவளை அழைத்துச் சென்றான். ராணி சம்யுக்தா படத்திலும் இந்தக் காதலைப் பார்த்திருக்கிறோம். பிருதி விராஜன் சம்யுக்தை காதல் கதை அனைவரும் அறிந்தது.

1939இல் எஸ்.எஸ். அருணகிரி நாதர் எழுதிய இந்துஸ்தானத்து வீரர்கள் எனும் 63 பக்கங்கள் கொண்ட நூலில் பிருதிவிராஜன் எனும் தலைப்பில் பக்கம் 40இல் சொல்கிறார்.

தேசாபிமானம் ஒரு சிறிதும் இல்லாத ஜயச்சந்திரன் பிருதிவி யை ஒழிப்பதற்கு வழி யென்னவென்று பலவாறு சிந்தித்தான் (பக் 41). பிற அரசர்களைப் பகைக்கச் செய்தான். அதற்குமேல் வஞ்ச நெஞ்சம் படைத்தவராகிய ஜயச்சந்திரன், குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பைப் போன்று என்ன செய்தான் தெரியுமா? “பாதுஷாவே (முகமது கோரி) நீர் தேர்ச்சி பெற்ற வீரர்கள் அடங் கிய பெருத்த சைனியத்தைக் கூட்டிக் கொண்டு பிருதிவியின் மேல் படையெடுத்துவர வேண்டும்... இப்பொழுது வந்தால் ஜய முண்டாவது திண்ணம். நீங்கள் வருகிற காலத்தை முன்னதாகக்

குறிப்பிட்டால், நான் என்னுடைய சைனியங்களோடு வந்து தாங்கள் வருகிற வழியில் உள்ள யமுனா நதிக் கரையில் தங்களைச் சந்திக் கிறேன்'' என்று ஒரு கடிதம் எழுதி, அதை நம்பிக்கை வாய்ந்த ஒரு வீரன் வசம் கொடுத்து முகமது கோரிக்கு அனுப்பினார்.

கடிதத்தில் இருந்த விஷயத்தைக் கண்ட முகமது கோரி அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. உடனே 1,20,000 குதிரை வீரர்களுடன் பிருதிவியை எதிர்ப்பதற்காக இந்தியாவை நோக்கிப் பிரயாணமானான் (முன்கூறிய நூல் பக்கம் 44, 43). போர் நடந்தது, இறுதியில் பிருதிவிராஜன் கொல்லப்பட்டான்.

ஜெயச்சந்திரன் அழைத்துத்தான் முகமது கோரி, பிருதிவி ராஜன் மீது படையெடுத்து வந்தான். இது எஸ்.எஸ்.அருணகிரி நாதர் தரும் தகவல்.

டி. லட்சுமி நாராயணன் ஐயங்கார் பி.ஏ. எழுதிய ராஜபுத்ர வீரர் கள், (1920இல் சென்னை R.குமாரசாமி நாயுடு சன்ஸ் வெளியிட்ட நூல் 91, பக்கங்கள்) பக்கம் 8இல் “ஜயசந்திரன் பிருதிவிராஜ னைத் தொலைப்பதற்கு மிக இழிவான ஒரு வழியைத் தேடினான். அதாவது பரத கண்டத்திற்கப் பாலுள்ள கஜினி என்னும் முகம்ம திய நாட்டில் அரசு புரிந்துவரும் டார்ட்டாரிய அரசனைத் தனக்குத் துணையாக அழைத்தான்.

ஷிஹாபுடீன் (முகமதுகோரி) என்னும் அவ்வரசன் ஒரு பெரிய சேனையை அனுப்பினான்.

போரின் முடிவில் பிருதிவி கொல்லப்பட்டான். ஜயசந்திரனும் கங்காநதியில் தானாகவே விழுந்துமடிந்தான் (பக்கம் 11).

Amar Chitra Katha Brave Rajputs, பிரிதிவிராஜ் மற்றும் நான்கு ராஜபுத்ரத்து அரசர்களைப் பற்றிய சித்திரப்படக்கதை... அதிலும் ஜெயச்சந்திரன் கோரியை அழைத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. (Editor. Anantpai மும்பையில் அச்சிடப்பட்ட நூல் படக்கதை என்பதால் பக்கங்கள் எண் போடப்படவில்லை).

சென்னை இராஜதானி கலாசாலை தமிழாசிரியரும், தமிழ்க் கடல் வெளியீட்டுப் பதிப்பாசிரியருமாகிய கா.நமச்சிவாய முதலியார் 1931இல் சென்னை R.குமாரசாமி நாயுடு லயன்ஸ் நிறுவனத்தால் ஒரு ரூபாய் விலையில் பிருதிவிராஜன் எனும் நூலினை 167 பக்

கங்களில் வெளியிட்டுள்ளார். (பின்னர் இந்த நூல் 1944 இல் 144 பக்கங்களில் வெளிவந்துள்ளது). 1931இல் வெளிவந்த நூலில் பக்கம் 109, 110, 111, 112களில் ஜயசந்திரன் கோரியை படைகொண்டு வரச்சொன்னதை விவரித்துள்ளார்.

பரிதிமாற்கவிஞர் என்று பின்னாளில் தனது பெயரைத் தூய தமிழில் மாற்றிக் கொண்டவரும், உலக சரித்திரம், பிரபஞ்சதாரை அல்லது மானிடர் முன்னேற்றம் நூலின் ஆசிரியரும் தமிழ் செம் மொழியே என்று முதலில் சொன்னவருமான வை.சூரிய நாராயண சாஸ்திரி M.A., 1925 இல் எழுதி தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை சென்னையில் அச்சிட்டு 1 ரூபாய் 14 அணா விலையில் வெளி யிட்ட 264 பக்கங்களைக் கொண்ட நூல் 'நமது பரத கண்டம்' இந்த நூலில் பக்கம் 150இல் சொல்வார், ''பிரிதிவிராஜன் சம்யுக் தையைத் தூக்கித் கொண்டு சென்றதிலிருந்து ஜயசந்திரன் ஆத் திரம் பூண்டு பிரிதிவிராஜனைத் தண்டிக்க யத்தனஞ் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை. ஆதலால் முஹம்மத் கோரியின் உதவி யைக் கோரலாயினான்.

பக்கம் 151இல், ''சமயம் வாய்த்தது. உடனே அவன் பெரிய சைன்னியத்துடன் கிளம்பினான்'' என்று குறிப்பிட்டுள்ளார். 'சரித் திர தீபம்' என்ற நூல் முகப்புப் பக்கங்கள் கிடைக்கவில்லை. இந்த நூலில் பக்கம் 103இல் ''ஜயசந்தனுக்குப் புத்தி பிறக்கவில்லை, பழிவாங்கும் ஆவலே ஓங்கி நின்றது.

ஆதலின் முகம்மது கோரியை அழைத்தான் படை கொண்டு வரும்படி. கோரி முகம்மதும் பெரும் படையுடன் வந்தான். பெருமித மாக ஜயசந்தனும் துணையாக எழுந்தான். இறுதியில் டெல்லி நக ரம் கோரி வசமாயிற்று'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.ஆர்.சுப்பிரமணியன் பப்ளிஷர்ஸ் திருநெல்வேலி ஜங்ஷன் வெளியிட்ட இந்திய சரித்திரக் கதைகள் (வருடம் இல்லை) பக்கம் 36, 37இல் குறிப்பிடுவது இதோ:

அச்சமயம் ஆப்கானிஸ்தானத்தில் கோரி வம்சத்து அரசரான முகமதுகோரி ஆட்சி செய்து கொண்டிருந்தான். பிருதிவி மன் னன் மீது படையெடுத்து வரும்படி ஜயசந்திரன் அவனைத் தூண் டினான்.'' எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதிய சரித்திரக்கதைகள் நூலினை சக்திகாரியாலயம், சென்னை 1941இல் வெளியிட்டது.

அதில் பக்கம் 37இல் ஜயசந்திரனைப் பற்றிக் கூறும்போது 'கோடாரிக் காம்பன் ஜயசந்திரனும் வீறிநின்றான்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'இந்திய ஸ்தீரீ ரத்னங்கள்' எனும் புத்தகம் சித்திரப்படங்களுடன் ஸி.எஸ்.ராமசுவாமி ஐயர் எழுதி சென்னை கம்மர்ஷியல் அச்சக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, மாதர் மனோ ரஞ்சினி ஆபிஸ் சென்னையில் 8 அணா விலையில் 1912 இல் வெளிவந்தது அந்நூலில், பக்கம் 14, 15இல் வரும் செய்தி இதோ:

'ஜயசந்திரன் முகமது கோரி இருக்கும் தேசத்திற்கு ஒரு தூதனிடத்தில் பின் வருமாறு சொல்லி அனுப்பினான். தான் அவனுக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். பகிரங்கமாகவே தான் முகமது கோரியுடன் சேருவதாகச் சொன்னான். இவ்விதம் தூது சென்றவன் முகமது கோரியிடம் சொல்ல அவன் கேட்டுப் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல சந்தோஷப்பட்டு, படையுடன் இந்தியாவிற்கு வந்தான்.

ஜயசந்திரன் இந்தியாவின் பெரிய சத்ருவை வரவழைத்ததுடன் சும்மா இருக்கவில்லை. அவன் சிற்றரசர்களுக்குள்ளே கலகங்கள் உண்டாக்கிப் பிருதிவிராஜாவுடன் சேராமலிருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை யெல்லாம் செய்துவிட்டான்' இது ஸி.எஸ்.ராமசுவாமி ஐயர் 1912இல் எழுதியது.

வீரபத்தினிமார் என்ற நூல் வாமன்பிரஸ் அச்சகத்தில் (149 பிராட்வே சென்னை) அச்சிடப்பட்டது. ஆண்டு இல்லை, ஆசிரியர் பெயரும் உள்ள பக்கம் இல்லை. அந்த நூலின் இரண்டாம் பாகம் பக்கம் 26இல் 'அப்பால் (ஜய)சந்திரன் ஓர் ஆள் அனுப்பி மீண்டும் படை கொண்டு வரும் வண்ணம் கோரியை வேண்டினான். பழி வாங்க வேண்டுமென்று காலம் பார்த்திருந்த கோரிக்கு அத்தூது கண்டு உள்ளம் பூரிக்கலாயிற்று, உடனே முகம்மது கோரி ஒரு பெரும்படையுடன் வந்தான், பாரத பூமியின் மீது'.

எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் 1923இல் எழுதிய நூல் இராஜபுத்திரவிஜயம். சென்னை டி.வி.சி.பிரஸில் அச்சிடப்பட்ட 222 பக்கங்களைக் கொண்ட நூல். அதில் பக்கம் 35இல் "ஜயசந்தனுக்கோ எங்கனமேனும் பிருதிவியின் கொட்டத்தை குலைத்துவிட வேண்டுமென வைரம்பாய்ந்துவிட்டது. ஆகவே பாரத பூமிக்கு

மேற்கே கஜினியில் ஆண்டு வந்த ஷாபூதீன் (முகம்மது கோரி) என்பானுடைய உதவியை நாடினான். ஷாபூதீன் நேரில் புறப்பட்டு வந்தான் போருக்கு''.

பிருதிவிராஜன் சம்யுக்தையை தூக்கிச் சென்றது நாடோடிப் பாடல் கருத்தாக அமைந்தது. இச்சம்பவம் இம்மன்னரின் இருவரி டையே மனக்கசப்பை மேலும் அதிகரித்தது.

"His beautiful daughter is said to have been carried away by the Chauhan hero(பிருதிவிராஜ்), and the story of this romance has formed the theme of many of the bardic songs of the time.

This is said to have added to the bitterness of their relations so that Jaichand did not ally himself with Prithvirajan, when Muhammed of Cahur appeared on the scene' (An Advanced History of India, R.C.Majumdar, H.C.Raychauohuri, Kalikinkar Datta இணைந்து எழுதிய 1963இல் இலண்டனில் வெளி யான பத்தாவது பதிப்பு (முதற்பதிப்பு 1948) பக்கம் 278).

ஜெயசந்திரனுக்கும் பிருதிவிராஜனுக்கும் இருந்த மனக்கசப்பை தெள்ளத்தெளிவாகச் சொல்லியதோடு, இதனால்தான் முகமது கோரி படையெடுத்த போது ஜெயச்சந்திரன் பிருதிவிராஜன் பக்கம் சேரவில்லை என்கிறார் (அவர் கோரியை ஜெயச்சந்திரன் அழைத் ததை ஏற்றுக் கொள்ளவில்லை)

ராஜபுதனத்து இலக்கியங்களுக்குள் நான்கு நூல்கள் பிரபல மாய் விளங்கின.

1. பிருத்திவிராஜா ரஸோ (Prithiviraja - Raso)

2. பிரத்திவிராஜா விஜயம் (Prithiviraja - Vijaya)

3. கன்ஹடாடே பிரபந்தம் (Kan hadada prabhanda)

4. ஹம்மிரா மஹாகாவியம் (Hammira Mahakavya)

முதல் இரண்டு காவியங்கள் பிருதிவிராஜ் அடைந்த வெற் றிகளைச் சொல்லுவன. கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதியில் முஹம்மது கோரியுடன் பிருதிவிராஜன் போரிட்டு முத லில் வென்றது, பின்னர் தோற்றதும் அடக்கம்.

சந்த் பார்தாயினால் (Chand Berdai) இயற்றப்பட்ட பிருதிவிராஜ் காவியம் சொல்லும் கருத்து இது "... that Prithiviraja lost to Muhammad Ghuri because the Rajputs were often disloyal to each other, that his father in law opposed (ஜயச்சந்திரன்) him, and that his ministers crossed over to the enemy."

'பிருதிவிராஜன் முஹம்மது கோரியுடனான போரில் தோற்று விட்டார். ராஜபுத்திரர்கள் தங்களுக்கிடையில் ஒற்றுமையில்லாமல் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டனர். பிருதிவிராஜனின் மாமனார் அவரை எதிர்த்தார். பிருதிவிராஜனுடன் இருந்த மந்திரி கள் அணி மாறி முஹம்மது கோரி அணியில் சேர்ந்துவிட்டனர்.' இந்த உட்காரணங்களினால்தான் பிருதிவிராஜன் தோல்வியைத் தழுவ நேரிட்டது என்று பிருதிவிராஜ ரஸோ காவியம் தெளிவாகச் சொல்கிறது. (Romila Thapar. Somanath the many voices of a History Viking India, 123 தமிழில் சஃபி, கஜினி முகம்மது சோமநாதபடை யெடுப்பு, பாரதி புத்தகாலயம், சென்னை 2016 மே, பக்கம் 127, 128)

தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது கோரியை இந்தியாவிற்கு படையெடுத்து வரச் சொன்னது கன்னோசியின் ஜெயச்சந்திரன் தான். பாண்டிய மன்னர்கள் அலாவுதீன் கில்ஜியையும், மாலிக்காபூ ரையும் படையெடுத்து வரச் சொன்னார்கள். 16ஆம் நூற்றாண்டில் இராணாசங்கர் பாபரை படையெடுத்து வரச் சொன்னார். இதிலி ருந்து அறிந்துகொள்ளவேண்டிய ஒன்று,

வரச்சொன்னார்கள்... வந்தார்கள்... வென்றார்கள்...

என்பதுதான்.

இலக்கியச்சோலை வெளியீடுகள்

1.	இஸ்லாமிய செயல் வீரர்களின் அடிப்படை தகுதிகள்	190
2.	இம்பாக்ட் பக்கம்	40
3.	பசுவதை ஒரு வரலாற்றுப் பார்வை	220
4.	மனித இனத்திற்கெதிரான குற்றம்	100
5.	ஷஹீத் சையத் குதுப் வாழ்க்கை வரலாறு	30
6.	பத்ருப் போரின் அரசியல்	60
7.	அகக்கண்	60
8.	இறைநம்பிக்கையாளர்களின் வழிகாட்டி	75
9.	கோவை: போலீஸ் நடத்திய வெடிகுண்டு நாடகம்	65
10.	இஸ்லாமியப் பார்வையில் நேர நிர்வாகம்	110
11.	கர்கரேயை கொன்றது யார்?	140
12.	மொஸாத்: உலக பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்	135
13.	தென்காசி குண்டுவெடிப்பு	25
14.	பாட்லா ஹவுஸ் என்கௌவுண்டர்	50
15.	இடஒதுக்கீடும், முஸ்லிம்களும்	50
16.	ஈமான்: விளக்கு மாடங்கள்	40
17.	இஸ்லாம்: சந்தேகங்களும், தெளிவுகளும்	25
18.	வார்த்தைகளின் வலி தெரியாமல்	60
19.	தொடரும் பயணங்கள்	70
20.	இஸ்ரேலிய உறவின் விபரீதங்கள்	40
21.	குர்ஆன் கூறும் பனீ இஸ்ராயீல்	35
22.	புனையப்பட்ட வழக்குகளும் புதைக்கப்பட்ட வாழ்வுகளும்	150
23.	இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள்	110
24.	மேலப்பாளையம் முஸ்லிம்கள்	80
25.	காலித் மிஷ்அல்	100
26.	தமிழக முஸ்லிம்களின் அரசியல் வரலாறு	55
27.	பாபரி மஸ்ஜித் இடிப்பு: தொடரும் வரலாற்று துரோகம்	90
28.	வேண்டாம் மரண தண்டனை ஏன்?	50

29. அண்ணலார் கற்றுத் தந்த தலைமைத்துவம் 130
30. ரமலான் மேடை 100
31. மதமும் ஜனநாயகமும் 55
32. இடிந்தகரை சிந்தனைகள் 60
33. கோட்சேயின் குழந்தைகள் 250
34. சங்பரிவார்: நேற்று இன்று நாளை 110
35. மஹ்ஷரை நோக்கி 125
36. முஸ்லிம்களும் தமிழகமும் 150
37. நபிகளார் நம்மோடு வாழ்ந்தால் 60
38. கோளாறு எங்கே? 100
39. பாலஸ்தீனம் 60
40. நல்ல தமிழ் எழுதுவோம் 35
41. அல் இஹ்வானுல் முஸ்லிமூன் 75
42. இறை நம்பிக்கையாளர்களின் தொழுகை 120
43. நல்ல காலம் பிறக்குமா...? 65
44. எனது தலைவர் ஓர் இஸ்லாமியர் 25
45. மதரஸாபட்டினம் 150
46. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் 180
47. தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு 50
48. இஸ்லாம் ஓர் எளிய அணுகுமுறை
49. புத்தம் போதிக்கும் யுத்தம்
50. குற்றம் நடந்தது என்ன? 50
51. ஷூரா 25
52. நகரத்தில் ஊரடங்கு உத்தரவு 75
53. தொழுகை பயிற்சி ஒழுங்கும் சமூகப் பரிமாணமும் 50
54. ஐ.எஸ்.ஐ.எஸ். சாதித்தது என்ன? 25
55. நிறவெறியை குத்தி வீழ்த்திய வித்தகன் 15
56. இஸ்லாத்தில் தனிமனித சமூக உரிமைகள் 55
57. துரோகி 170

58. ஹாஷிம்புரா மே 22 120
59. சிறுபான்மை முஸ்லிம்களுக்கான இஸ்லாமிய சட்டம் 120
60. மாப்பிளா முஸ்லிம்கள் 60
61. நபி (ஸல்) வரலாறு 300
62. RTI – தகவல் அறியும் உரிமை சட்டம் 50
63. ஹமாஸ் இயக்க அரசியல் பார்வை 40
64. ஏகாதிபத்தியத்தின் எதிரி சதாம் ஹுஸைன் 90
65. திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும் 70
66. ரணங்கள் (நாவல்) 250
67. இஸ்லாம் கொள்கை இலக்கு இயக்கம் 50
68. இந்திய சுதந்திரப்போரில் இரு சகோதரர்கள் 90
69. இஸ்லாமும் அறிவியலும் 180
70. உங்கள் இதயத்துடன் இஸ்லாம் பேசுகிறது 150
71. நபிகளாரின் நாட்குறிப்பில் நாங்கள் 90
72. ஸ்பெயினில் இஸ்லாம் 130
73. இஸ்லாம் வென்றெடுத்த ஷாம் 450
74. அமித் ஷா சொல்ல மறந்த கதை 40
75. பா.ஜ.க வை ஏன் வீழ்த்த வேண்டும் 95
76. பாபரி மஸ்ஜித் கதை 100
77. வேர்கள் 210
78. என் கதை 110
79. RSS ஐ அறிந்து கொள்வோம் 80
80. யார் இந்த தேவதை 50
81. இன்று வரை இந்திய குடிமகன் நாளை?
CAA -NRC -NPR ஒரு பார்வை 15
82. தமிழகத்தில் கிலாபத் இயக்கம் 25
83. ரோஹிங்யா முஸ்லிம்கள் 50
84. என் பெயர் ஷாஜிதா 30
85. அதிசய மன்னர் அலாவுதீன் கில்ஜி 120
86. இஸ்லாமிய குடும்பமும் மேற்கத்திய கலாச்சாரமும் 160

87. இஸ்லாமும் மதச்சார்பற்ற கல்வியும் 110
88. இஸ்லாமிய மறுமலர்ச்சி 150
89. கவிதை ஓர் இஸ்லாமியப் பார்வை 120
90. சிறையில் எனது நாட்கள் 150
91. துரோகி வீரர் ஆன கதை 30
92. இந்திய யூதர்கள் 20
93. ராணி ரஸியா 25
94. ஆண் பெண் வேறுபாடுகள் 60
95. மருதநாயகம் 150
96. வரச்சொன்னார்கள் வந்தார்கள் வென்றார்கள் 20
97. யமுனை நதிக்கரையில் (ஔரங்கசீப் சரித்திர நாவல்) 275
98. பெரியாரும் இஸ்லாமும் 15
99. காயிதே மில்லத் ஒரு சகாப்தம் 75
100. பாடநூல்களில் வெறுப்பு அரசியல் 95
101. சர்வாதிகாரத்தால் வீழ்த்தப்பட்ட முர்ஸி 35
102. வரலாற்று நாயகர்கள் 50
103. ஆதார் அன்று முதல் இன்று வரை 25
104. பெகாசஸ் உளவு மென்பொருள் 10

புதுயுகம் வெளியீடுகள்

1. மேற்குவானம் ஐரோப்பாவிற்குள் இஸ்லாம் நுழைந்த வரலாறு
2. இப்பி ஃபக்கீர் 90
3. சேரமான் பெருமாள் 210
4. உமர் முக்தார் 150
5. சிந்துநதிக் கரையினிலே 170
6. கறை படிந்த காலம் (நெடுங்கதைகள்) 70

இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களை நாகரிகம் தெரியாதவர்களாகவும் கொடுங்கோலர்களாகவும் சித்தரிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'கோயில்களை இடித்தார்கள், கோயில் சொத்துகளை கொள்ளையடித்தார்கள், இந்துக்களை கொத்துக் கொத்தாக கொலை செய்தார்கள்' என்று ஆதாரம் இல்லாத செய்திகள் இன்று வரலாறுகளாக திணிக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்து திரைப்படங்களும் எடுக்கப்படுகின்றன.

இதனை மையப்படுத்தி பிரபல எழுத்தாளர்களின் நூல்களும் வந்துள்ளன. மதன் எழுதிய 'வந்தார்கள் வென்றார்கள்' அதில் முக்கியமானது.

ஆனால், முஸ்லிம் மன்னர்களை வரவழைத்தது யார் என்ற உண்மையை மதன் தனது புத்தகத்தில் சொல்லவில்லை. மதன் சொல்ல மறந்த அல்லது மறைத்த செய்திகளை வரலாற்று ஆதாரங்களுடன் அழகாக இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளார் வரலாற்றாய்வாளர் செ. திவான்.

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

₹20